[1979 மார்ச் 20

(2) தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஈ) கைத்தறிச் சங்கத் தொழிலாளர்களது போராட்டம் குறித்து.

[முற்பகல் 11–00]

திரு. க. சுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது நாடு முழுவதும் கைத்தறி சங்கத் தொழிலாளர்கள் நடத்தி வருகின்ற போராட்டம் காரணமாகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது நூல் விலை ஏறி விட்டது. இந்த நிலையில் திடீரென்று அன்ஷெட்யூல்டாக நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களையும் அழைத்துக்கொண்டுபோய் பம்பாயிலே சம்பந்தப்பட்ட துணைக் கமிஷனரை சந்தித்து இந்த விவகாரத்தை முடித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறதே; அதைப்பற்றி இங்கே ஒரு அறிக்கை வைப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆகவே அறிக்கை வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—இதுபற்றி 41ஆவது விதியின் கீழான கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்த பிறகு பேசிக்கொள்ளலாம்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) கலசபாக்கம் தொகுதியில் விவசாய மின் இணைப்புகளுக்கு மின் வெட்டு உள்ளது குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலசபாக்கம் தொகுதியில் உள்ள வீரளூர், ஆதமங்கலம், சிறுவள்ளூர், தென்மாதிமங்கலம், அரிணகிரிமங்கலம், கடலாடி, தேவணாம்பட்டு, பெரிய கிளாம்பாடி மற்றும் பல கிராமங்களுக்கும் காஞ்சி மின்நிலையத்திலிருந்து 8–3–1979 முதல் விவசாய மோட்டார்கள் இயங்க அறவே மின்சாரம் தராமல் மோட்டார்கள் இயங்காமல் பல ஆயிரக்கணக்கான நஞ்சைப் பயிர்கள் காய்ந்தும், மோட்டார்கள் காயில் தீய்ந்தும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு கொதிப்படைந்துள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலசபாக்கம் தொகுதியில் உள்ள வீரளூர், ஆதமங்கலம் மற்றும் பல கிராமங்களுக்கு காஞ்சி 33/Mகே.வி. உபமின